# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு மே மாதம் 30 –ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

**மயிலாடுதுறை**
**நாள்: 27.05.2019**

**தனி அலுவலர் / ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **30.05.2019** | 1) இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 05.02.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:536** |

| வ. எண் | வேலையின் விபரம் | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விவரம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மயிலாடுதுறை நகராட்சியின் உள்ளாட்சி தேர்தல் –2019 தொடர்பாக வாக்காளர்பட்டி | கலைஞர் அச்சகம், ஆப்செட் பிரின்ட்டர்ஸ், மயிலாடுதுறை. | 1. A4 size print out per page – Rs.2.50<br>2. A4 size Xerox per page – Rs.1.25<br>3. A4 size Book Binding – Rs.60.00<br>4. Booklet Thick Binding – Rs.130.00 | நாதன் அச்சகம், ஆப்செட் பிரின்ட்டர்ஸ், மயிலாடுதுறை.<br>. |

| | | | | |
|---|---|---|---|---|
| | யல் ஒளிநகல் எடுத்தல், பிரிண்ட் செய்தல், புத்தகம் தயாரித்தல் மேற்கொள்ளப்படும் பணி. | நாதன் அச்சகம், ஆப்செட் பிரிண்ட்டர்ஸ், மயிலாடுதுறை. | 1. A4 size print out per page – Rs.2.00<br>2. A4 size Xerox per page – Rs.1.00<br>3. A4 size Book Binding – Rs.50.00<br>4. Booklet Thick Binding – Rs.100.00 | |
| | | ஜெமினி பிரஸ், ஆப்செட் பிரிண்ட்டர்ஸ், மயிலாடுதுறை. | 1. A4 size print out per page – Rs.3.00<br>2. A4 size Xerox per page – Rs.1.30<br>3. A4 size Book Binding – Rs.65.00<br>4. Booklet Thick Binding – Rs.150.00 | |

அலுவலககுறிப்பு : 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்.5–ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. தேர்தல் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொள்ள, பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. 5719/2017/எப்1

---

**தீர்மான எண்:537**

**2)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட மகாத்மா காந்திஜி ரோட்டில் உள்ள தனியார் பள்ளியான TELC நடுநிலைப்பள்ளியில் மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிக்கான வாக்குச்சாவடிகள் எண்.149,150,151,152 மற்றும் 153 ஆகிய ஐந்து வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது. இதில் 4158 வாக்காளர்கள் உள்ளனர். மேலும் அப்பள்ளியில் 5 வாக்குச்சாவடி மையங்களுக்கு ஒரு பகுதியில் படிக்கட்டும், ஒரு பகுதியில் படிக்கட்டுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதள (Ramp) அமைப்பு மட்டுமே உள்ளது. இதில் வாக்குச்சாவடி எண்.149 பதற்றமான வாக்குச்சாவடி எனவும் இதில் 1367 வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமெனவும், இதற்கு படிகட்டு மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கான சாய்வுதள அமைப்பும் அமைக்க வேண்டுமெனவும் தேர்தல் பொது பார்வையாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அது நகராட்சி கட்டுப்பாட்டில் அல்லாத தனியாருக்கு சொந்தமான பள்ளி எனவும், அதற்கு செலவினம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆனையர் சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெறவேண்டுமென தெரிவித்த நிலையில் தேர்தல் அவசர அவசியம் கருதி மேற்கண்டப்பணியினை 16.04.2019க்குள் உடனடியாக மேற்கொள்ளுமாறு தேர்தல் பொது பார்வையாளர் 28, மயிலாடுதுறை பாராளுமன்றத்தொகுதி அவர்களது அவசரக்குறிப்பு நாள்:12.04.2019இல் தெரிவிக்கப்படுள்ளது. எனவே மேற்கண்ட தனியார் பள்ளியான TELC நடுநிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி மையம் 149இல் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வுதள அமைப்பு (Ramp) படிக்கட்டு அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு தேர்தல் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1615/2019/இ1

**தீர்மான எண்:538**

3) இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கழிவறை இல்லாத நபர்களுக்கு மத்திய மாநில அரசுகள் அளிக்கும் நிதியுதவி ரூ. 8000/– ஐ கொண்டு கழிப்பிட கட்டிடம் கட்டி தருவதற்கு கோரி 27.05.2019 –ந்தேதி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளிக்கும் நபர் அல்லது நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒரு கழிப்பிட கட்டிடம் |
|---|---|---|
| 1 | திரு. பி. ரவிச்சந்திரன்,<br>செவன்ஹில்ஸ் நிறுவனத்திற்கு கட்டிட ஒப்பந்தக்காரர்,<br>மயிலாடுதுறை | ரூ.8000/– |
| 2 | திரு. எஸ். வெங்கடேசன்<br>ஆர்.எஸ்.வி. நிறுவனம்,<br>மயிலாடுதுறை. | ரூ.8100/– |
| 3 | திரு. அபிராமசுந்தரம்<br>ஸ்ரீ சாய் கன்ஸ்ட்ரக்ஷன்,<br>மயிலாடுதுறை. | ரூ.8200/– |

மேற்கண்டவாறு விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் அளித்துள்ள நிறுவனத்தின் உரிமையாளர் திரு.பி.ரவிச்சந்திரன் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதாக இதனை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி கழிப்பிட பணியினை விரைவாக முடிக்க வேண்டிய நிலையில் உள்ளதால் தனி அலவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4232/2016/எச்1.**

**தீர்மான எண்:539**

4) மயிலாடுதுறை நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு. K. மனோகரன் என்பவர் 31.05.2019 அன்று ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகைக்கான பங்குத்தொகை ரூ.10,000/–ஐ நகராட்சி பொது செலவு நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.002225/2019/பி2

| | | |
|---|---|---|
| | 5), இந்நகராட்சி சுமார் 11.270 சதுர கீ.மீ பரப்பளவினை கொண்டு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கிட்டின்படி 85599 ஆகும். நகராட்சி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 246 தெருக்களை கொண்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில் முக்கிய நகரங்களுள் ஒன்றாகும். மேலும், மயிலாடுதுறை நகரத்தில், நகராட்சி மேல்நிலைப்பள்ளி–2, தனியார் மேல்நிலைப்பள்ளிகள்–7,அரசு உதவி பெறும் பள்ளிகள்–5, தினசரி காய்கறி சந்தை–1, தற்காலிக பேருந்து நிலையம் –1, திரையரங்குகள்–4, கல்யாணமண்டபம்–20, அரசு பொது மருத்துவமனை–1, தனியார் மருத்துவமனைகள்–11, நகராட்சிக்கு சொந்தமான கழிப்பறைகள்–7, மேலும் நவக்கிரக திருக்கோயில்களுக்கு செல்லும் மையப்பகுதியாக மயிலாடுதுறை நகராட்சி விளங்குகிறது. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் துலா உற்சவம் விழா இந்தியா முழுவதும் வருகை புரிவார்கள்.<br><br>நகராட்சி துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்வதற்கான அளவுகோல் 28.05.1942 நாளில் பொது சுகாதார இயக்குநர், சுற்றறிக்கை எண்.46640/இ/41–2ல் வெளியிடப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட அளவுகோல் அரசாணை நிலை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை நாள்:30.04.1997ல் வெளியிடப்பட்டது.<br><br>மேற்காணும் திருத்திய அளவுகோலின்படியும் கணக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவன வரி வதிப்புகளின்படியும் இந்நகராட்சிக்கு தேவைப்படும் பணியாளர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது. | **தீர்மான எண்:540** |

| வ. எண். | வேலை வகைப்பாடு | துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு அல்லது 3 கிலோ மீட்டர் சாலை, 3 நபர்கள் வீதம் 21867 குடியிருப்புகள் | 262 |
| 2. | பெரிய லாரி இரண்டு எண்ணிக்கை 2 X 4 | 8 நபர்கள் |
| 3. | சிறிய லாரி மூன்று எண்ணிக்கை 3 X 3 | 9 நபர்கள் |
| 4. | உரக்கிடங்கு ஒரு நாளைக்கு 20–டன் 2 நபர்கள் 20 மெட்ரிக் அதிகமாக குப்பைகள் சேர்த்து 4 நபர்கள் | 3 நபர்கள் |
| 5. | பேருந்து நிலையதிற்கும் மற்றும் அங்கன்வாடி உள்ளகட்டண கழிப்பிடங்கள் பராமரித்தல் 1 நபர்கள் | 1 நபர்கள் |
| 6. | பேருந்து நிலைய கழிப்பறையை பராமரிக்க ஆண்டு மற்றும் பெண் | 2 நபர்கள் |
| 7. | தற்காலிக பேருந்து நிலையம் சுத்தம் செய்ய 4 நபர்கள் (B Class பேருந்து நிலையம்) | 4 நபர்கள் |
| 8. | பழைய பேருந்து நிலையம் கழிப்பறையை சுத்தம் செய்ய 4 நபர்கள் | 4 நபர்கள் |
| 9. | பழைய பேருந்து நிலையம் கழிப்பறையை சுத்தம் செய்ய ஆண்–1,பெண்–1 | 2 நபர்கள் |
| 10. | கழிவுநீர் ஊற்று (julting Rod) | 2 நபர்கள் |
| 11. | கழிவு நீர் ஊற்று (Slug gage Vehicle) | 2 நபர்கள் |

மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் 248 ஆகும். தற்போது 148 நிரந்தர துப்புரவு பணியாளாளர்கள் மட்டும் பணியில் உள்ளனர். 80 நிரந்தர் துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4294/பி3/2016 நாள்:03.03.2016ன்படி தற்போது 80 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிசெய்து வருகின்றார்கள்.

**<u>துப்புரவு பணியாளர்கள் தேவை விபரம்</u>**

| வ. எண். | விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | அரசாணை எண்.101, (ந.நி) நாள்:30.04.1997ன்படி கணக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் எண்ணம் | 300 நபர்கள் |
| 2. | அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் | 240 நபர்கள் |
| 3. | பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் எண்ணம் | 148 நபர்கள் |
| 4. | அளவுகோலின்படியும் அனுமதிக்கப்பட்ட பணியிடத்திற்கும் உள்ள வித்தியாசம் | 152 |
| 5. | ந.க.எண்.4294/பி3/2016, நாள்:03.02.2016ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி வழங்கிய பணியிடங்கள் எண்ணம் | 81 |
| 6. | அரசாணை எண்.101, நாள்:30.04.1977ன்படி மயிலாடுதுறை நகராட்சி சுகாதார பணிகளுக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணம் | 152 நபர்கள் |

எனவே, மேற்காணும் அரசாணையின்படி கணக்கீடு செய்யப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணி நியமனம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும், மேற்காணும் அரசாணையில் தேவைப்படும் 152 காலிபணியிடங்கள் நிரப்ப மறு உத்தரவு வரும்வர பொது சுகாதார பணிகள் அவசர அவசியம் கருதி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியாளர், அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினசரி ஊதிய விகிதத்தில் (Out Sourcing of Sanitary Workers) 152 பணியாளர்கள் பணி அமர்த்திட நகராட்சி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை, அவர்களின் அனுமதி பெற உரிய கருத்துரு தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டிப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> பொது சுகாதார பணிகள் அவசர அவசியம் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2005/2015/எச்1

| | | |
|---|---|---|
| | 6) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட பட்டமங்கலத்தெரு கதவு எண் 117/123–ல் அமைந்துள்ள வீட்டிற்கு சொத்துவரி சீராய்வின் மூலம் வரி உயர்வு செய்யப்பட்டதை எதிர்த்து மாவட்ட முன்சீப் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் திரு. வி.ஸ்ரீதரன் மற்றும் இருவரால் நகராட்சியை எதிர்த்து அசல் வழக்கு எண் 96/2019ல் வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே மேற்படி வழக்கினை எதிர்த்து நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் வழக்காடவும் வழக்கிற்கான வக்காலத்து மற்றும் எதிர்வாதுரை தாக்கல் செய்யவும், அதற்கான செலவினம் ரூ. 5000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் அ1/1581/2019 | தீர்மான எண்:541 |
| | 7)_மயிலாடுதுறை முதன்மை மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.144/2019–ல் R. உஷா க/பெ. சீதாராமன் 31. சேந்தங்குடி சீர்காழி குறுக்கு ரோடு மயிலாடுதுறை அவர்கள் தனது தாவா சொத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக 1. மாவட்ட ஆட்சியர், 2. வட்டாட்சியர், 3.நகராட்சி ஆணையர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகவும் அதற்கான செலவினம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அசல் வழக்கு எண்.144/2019–ல் நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகவும் அதற்கான செலவினம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.1929/2019/எப்1. | தீர்மான எண்:542 |
| | 8) மயிலாடுதுறை நகராட்சி கடந்த 15.11.2018 அன்று கஜா புயல் காரணமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்நகராட்சியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்குகளில் LED விளக்குகள் (20 W) - 171 எண்ணிக்கை, மற்றும் சோடியம் விளக்குகள் (250 W) - 85 எண்ணிக்கை சேதமடைந்துள்ளது. தற்போது பொதுமக்கள் நலன்கருதி உடனடியாக சேதமடைந்த தெருவிளக்குகளை அகற்றிவிட்டு (as per current rate-ல்) புதியதாக அமைத்து தருவதற்கு ஒப்பந்த முறையில் தெருவிளக்கு பராமரிப்பு செய்து வரும் M/S Sabari Electricals நிறுவனத்தார் மூலம் கஜா புயல் நிவாரண நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு:<br><br>1) அனுமதிக்கலாம்.<br><br>2) மேற்படி செலவீனத்திற்கு கஜா புயல் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கி, பணி மேற்கொண்டதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br><br>3) மேற்படி பணியின் செலவீனத் தொகை ரூ.1776083.00 ஆகும். நிர்வாக நலன் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அரசு கஜா புயல் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் அதனை இந்நகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>ந.க.எண். 3505/2012/இ2 | தீர்மான எண்:543 |

**9)** இந்நகராட்சி பொது நிதி 2018-19ன் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 07.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின்பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:544**

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| பொது நிதி 2018-19 | | | | | |
| 1. | வார்டு எண்.27 சின்னகண்ணார தெருவிற்கு புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | **6,20,000/-** | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. | **ரூ.542760.49/–** (-) 0.254% குறைவு | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. |
| | | | திரு. T.G. மணிகண்டன், மயிலாடுதுறை. | **ரூ.544447.49/–** (+) 0.056% அதிகம் | |
| 2. | மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளில் CC Patch போடும் பணி. | **1,30,000/-** | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. | **ரூ.114384.00/–** (-) 0.016% குறைவு | திரு. K. செந்தில், மயிலாடுதுறை. |
| | | | திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை. | **ரூ.114432.00/–** (+) 0.026% அதிகம் | |

அலுவலககுறிப்பு.

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. வரிசை எண்.1–ல் கண்டுள்ள பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பொது நிதியின்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், மேற்படி பணியினை SuWaSem திட்டத்தில் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதும் அதனை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் ஈடு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.** 00849/2019/இ1

| | | |
|---|---|---|
| | 10) இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN.82.A.0658 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தின் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி மேற்படி வாகனத்தினை மகேந்திரா நிறுவனமான Siva Auto mobiles (P) Ltd., Trichy நிறுவனத்திற்கு பழுது நீக்கம் செய்ய அனுப்பி வைத்திடவும், அதற்குண்டான செலவீனங்களுக்கும் இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1089/2019/இ1 | **தீர்மான எண்:545** |
| | 11) மயிலாடுதுறை நகராட்சி 10.05.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கள ஆய்வின் போது வண்டிப்பேட்டையில் அமைந்து வரும் நுண்ணுயிரி கிடங்கு மையம் ஆய்வு செய்த போது அப்பகுதியின் கிழக்கு பகுதியில் இடிந்து, சுற்றுசுவர் இல்லாத இடத்திற்கு புதியதாக சுற்றுசுவர் உடனடியாக அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர நேரடியாகவும், ஆய்வு குறிப்பிலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தினை அளவீடு செய்து மதிப்பீடு தயார் செய்ததில், அதற்குண்டான மதிப்பீடு தொகை ரூ.2.60 இலட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.002307/2019/இ1 | **தீர்மான எண்:546** |
| | 12) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பதிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை குழாய் தரங்கை சாலையில் சின்னகடை தெரு மயூரநாதர் நுழைவு வாயில் அருகில் பழுதடைந்து சாலையானது உள்வாங்கி உள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், வாகன ஒட்டுனர்களுக்கும் சிரம நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்போது தோராயமாக 15 மீ நீளத்திற்கும், 7 மீ ஆழத்திற்கும் மண்வேலை செய்து புதியதாக பாதாள சாக்கடை குழாய் பதித்திட தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.002308/2019/இ1 | **தீர்மான எண்:547** |

| | | |
|---|---|---|
| | 13) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இயங்கும் பாதாள சாக்கடை கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள ஜெனரேட்டர்களின் பேட்டரி, Dynamo, Pump service மற்றும் இதர பழுதுகளை சீர்செய்திட தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2399/2019/இ1 | **தீர்மான எண்:548** |
| | 14) மயிலாடுதுறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குடிநீர் குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள Air valve பாதுகாப்பு தொட்டியின் Cover slab பழுதடைந்துள்ள நிலையில் அப்பகுதியில் உள்ள கால்நடைகள் மற்றும் வாகனங்கள் உள்ளே விழுந்து விபத்துக்கு உள்ளாகிறது. இதனால் Air valve-களும் பழுதடைந்து ஆங்காங்கே குடிநீர் குழாயில் உடைப்புகள் ஏற்பட்டு வருகிறது. எனவே அத்தொட்டிகளுக்கு RCC-Slab அமைத்து Air valve-களை பாதுகாத்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2400/2019/இ1 | **தீர்மான எண்:549** |
| | 15) இந்நகராட்சிக்கு குடிநீர் பெறப்படும் கொள்ளிடம் ஆற்றிலிருந்து முடிகண்டநல்லூரில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் சுமார் 21 கி.மீ Pumping main மூலம் நகராட்சியின் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் வரப்படும் குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள Air valve பழுதடைந்துள்ளதால் ஆங்காங்கே உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருகிறது. எனவே 15 எண்ணிக்கை Air valve வாங்கி பொருத்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2401/2019/இ1 | **தீர்மான எண்:550** |

| | | |
|---|---|---|
| | 16) மயிலாடுதுறை நகராட்சி முடிகண்டநல்லூரில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தின் Lader, Gate control room steps, Door, Window, ஆகியவற்றினை பாரமரித்து Plastering, Painting ஆகிய வேலைபாடுகள் செய்து புரணமைப்பு பணி செய்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 2402/2019/இ1 | தீர்மான எண்:551 |
| | 17) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்டபட்ட வார்டு.04, பிளாக்.23, நகரளவு எண்கள்.1051/1–ல் 26218 சதுரஅடி இடத்தினை மனைகளாக பிரிக்க திரு. V.ராமலிங்கம் 1/1. பிள்ளையார் கோயில் தெரு, மேலபாதிகிராமம் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு விண்ணபித்ததில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1207/2017/தம2 நாள்.13.10.2017–ல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளபடி உத்தேச இடத்தில் அமையும் சாலைகளை சொந்த செலவில் தார்சாலையாக அமைத்து சாலையை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது, அதன்படி மனுதாரரால் மனைப்பிரிவில் தார்சாலைகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி மழைநீர் வடிகால், தெருவிளக்குக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.15000/– வசூல் செய்யலாம். மின்பாதை வசதிக்காக உரிய தொகையை மின்சார வாரியத்திற்கு செலுத்த அனுமதிக்கலாம். மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகளை பத்திரபதிவு அலுவலகம் மூலம் பதிவு செய்து நகராட்சி வசம் எடுத்துக் கொள்வது குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு.** மின்வசதிக்காக உரிய தொகை மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகளை பத்திரபதிவு அலுவலகம் மூலம் பதிவு செய்து தானமாக ஏற்கலாம் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கலாம்.<br><br>**ந.க.எண்.**3785/2017/எப்1. | தீர்மான எண்:552 |

தீர்மான எண்:553

18) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மற்றும் பாதையோரங்களில் வியாபாரம் செய்பவர்களிடம் 270 – வது பிரிவின்கீழ் வசூல் செய்யும் உரிமத்திற்கு துறை மூலம் வசூல் செய்ய தேவையான ரசீது புத்தகங்கள் அச்சிட்டு வசூல் செய்வதற்கு விலைப்புள்ளி 07.03.2019 அன்று கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண். | விலைப்புள்ளி இனம்–1 | விலைப்புள்ளி கோரியவர் மற்றும் கொடுத்தவர் விவரம் | 100 ரசீது கொண்ட ஒரு புத்தகத்தின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திறப்புக்கடை / சாலையோரம் வண்டியில் வைத்து வியாபாரம் செய்வதற்கு / (3'X2') தரையில் பரப்பி வைத்து வியாபாரம் செய்பவருக்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. K. பிரபு ,<br>கலைஞர் அச்சகம்<br>38/22, கச்சேரி ரோடு,<br>மயிலாடுதுறை.<br>2. N. ராதாகிருஷ்ணன்<br>ஜெமினி பிரஸ்<br>3. நாதன் பிரஸ்<br>64. கச்சேரி ரோடு,<br>மயிலாடுதுறை. | ரூ. 38/–<br>ரூ. 40/–<br>ரூ. 30/– |
| 2 | இனம் –2<br>மினிலாரி சாலையோரத்தில் மூன்று சக்கர வண்டியில் விற்பனை செய்வது / திரு.வி.க. மார்க்கெட்டினை தவிர மற்ற நகராட்சி பகுதிக்குட்பட்ட இடங்களில் லாரியில் கொண்டு வரப்படும் சரக்குகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1. K. பிரபு ,<br>கலைஞர் அச்சகம்<br>38/22, கச்சேரி ரோடு,<br>மயிலாடுதுறை.<br>2. N. ராதாகிருஷ்ணன்<br>ஜெமினி பிரஸ்<br>3. நாதன் பிரஸ்<br>64. கச்சேரி ரோடு,<br>மயிலாடுதுறை. | ரூ. 38/–<br>ரூ. 40/–<br>ரூ. 30/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.3–ல் குறைந்த விலைவிகித கொடுத்துள்ள நாதன் அச்சகத்தின் விலைப்புள்ளி ஏற்று உரிய ரசீது புத்தகம் அச்சிட மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு உரிய ரசீத புத்தகங்கள் அச்சிடுவதற்கு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரருக்கு உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

ந.க. எண்.5378/2016/அ2.

<table>
<tr>
<td></td>
<td>19) மயிலாடுதுறை நகராட்சி பொது நிதியின் கீழ் வார்டு எண்.31 பெசன்ட் நகர் பூங்கா மற்றும் வார்டு எண்.29, சுப்ரமணியபுரம் பூங்கா ஆகியவற்றில் ONSITE COMPOST CENTRE அமைத்திட மன்றப்பொருள் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மன்ற தீர்மான எண்.512 நாள்:27.02.2019ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அப்பூங்காக்களில் ONSITE COMPOST CENTRE அமைத்திட பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதால் அப்பணிகளை வார்டு எண்.31 ராஜீவ் நகர் நகராட்சி பூங்கா மற்றும் வார்டு எண்.10, கணபதி நகர் நகராட்சி பூங்கா ஆகிய இடங்களில் மாற்றம் செய்திடவும், அப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.K.செந்தில் ஒப்பந்தகாரரால் அதே விலைவிகிதத்தில் பணி மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>தேர்வு செய்யப்பட்ட இடம்</th><th>மாற்றம் செய்யப்பட்ட இடம்</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.31 பெசன்ட் நகர் பூங்கா</td><td>வார்டு எண்.31 ராஜீவ் நகர் நகராட்சி பூங்கா</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண்.29, சுப்ரமணியபுரம் பூங்கா</td><td>வார்டு எண்.10, கணபதி நகர் நகராட்சி பூங்கா</td></tr>
</table>
அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 3363/2018/இ1</td>
<td>தீர்மான எண்:554</td>
</tr>
<tr>
<td></td>
<td>20) மயிலாடுதுறை நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பகுதிகளில் கூடுதலாக விடுப்பட்டுள்ள 171 எண்ணிக்கை குழல் விளக்குகளையும், 85 எண்ணிக்கை 250 W சோடியம் ஆவி விளக்குகளையும் தற்போது பராமரிப்பு பணி செய்து வரும் Sabari Electrical நிறுவனத்தார் மூலம் அந்த ஒப்பந்ததாரரால் ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவவக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி 171 எண்ணிக்கை குழல் விளக்குகளையும், 85 எண்ணிக்கை 250 W சோடியம் ஆவி விளக்குகளையும் ஜனவரி 2019 முதல் பராமரிப்பு பணி மேற்கொள்வதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந.க.எண்.4527/2018/இ1.</td>
<td>தீர்மான எண்:555</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 21) மயிலாடுதுறை நகராட்சி (1) கச்சேரி சாலையில் உள்ள ஆள்நுழைவு தொட்டியின் அடிப்பாகம் உடைந்து உள்வாங்கும் நிலையில் உள்ளது. அதனை சிமெண்ட் கான்கிரீட் மூலம் சரிசெய்திடவும், மற்றும் (2) தரங்கை சாலை பாதாள சாக்கடை Pumping main பைப் மூலம் தான் நகரின் அனைத்து கழிவு நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த பிராதான குழாயில் கொத்த சாலை அருகில் உடைப்பு ஏற்பட்டு சாலையானது உள்வாங்கி பொது மக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் சிரமநிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இரண்டு பாதாள சாக்கடை பணியினை உடனடியாக சரி செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1,75,000/-(ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்). இதனை நகராட்சி சட்ட விதி எண்.15ன் படி பாதாள சாக்கடை திட்ட நிதியின்கீழ் பணி மேற்கொள்ளவும், மேலும் தற்பொழுது பணி செய்து வரும் ஒப்பந்த நிறுவனமான M/S Versatile Engineering Services, மயிலாடுதுறை மூலம் பணி செய்திடவும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br><br>ந.க.எண். 2569/2019/இ1 | தீர்மான எண்:556 |